


பாடம் 4 ஏப்ரல் 20-26

# சத்தியத்துக்காக நிற்றல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** தானி 7:23–25; வெளி 12:6,14; யூதா 3,4; வெளி 2:10; அப் 5:28–32; சங் 19:7–11; 1யோவான் 5:11–13.

**மனன வசனம்:** சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும். யோவான் 3:14,15.

இன்றைய துருக்கியிலுள்ள இஸ்மிர் எனும் கடற்கரைநகரம்தான் வெளிப்படுத்தலில் சொல்லப்படுகிற வேதாகமக்கால சிமிர்னா பட்டணம். சுமார் 1 லட்சம் மக்கள் வசித்த இந்தப் பண்டைய நகரமானது, முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இரண்டாம் நூற்றாண்டிலும் செழிப்பாக இருந்தது. வளமிக்க இப்பட்டணம் ரோமின்மேல் மிகுந்த பற்றுடன் இருந்தது.

சிமிர்னாவின் குடிமக்கள் அனைவரும் வருடத்திற்கு ஒருமுறை ரோமக் கடவுள்களுக்கு தூபவர்க்கமிடவேண்டும் என்பது அரசகட்டளை. இரண்டாம் நூற்றாண்டில் சிமிர்னாவில் வளர்ந்துவந்த கிறிஸ்தவ சபை இருந்தது; அவர்கள் அரசகட்டளைக்கு ஒத்துப்போகவில்லை. ஆதிகாலத் திருச்சபைத் தலைவரான பாலிகார்ப் அந்த ரோமக் கடவுள்களுக்குத் தூபவர்க்கமிடவும், அதன்மூலம் தன் தேவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யவும் மறுத்தார்; அதினிமித்தம் சிமிர்னாவின் பொதுச்சதுக்கத்தில், எரிகம்பத்தில் இரத்தச்சாட்சியாக எரிக்கப்பட்டார். கிறிஸ்துவை மறுதலிக்கும்படி கடைசிமுறையாக அவரிடம் கேட்டபோது, அந்த முதியவர் “எண்பத்தாறு ஆண்டுகளாக அவரைச் சேவித்து வருகிறேன்; அவர் எனக்கு எந்தத் தீங்கும் செய்ததில்லை. என்னை இரட்சித்த ராஜாவுக்கு எதிராக நான் எவ்வாறு தீமையாகப் பேசமுடியும்?” என்று கேட்டார்.

கிறிஸ்துமேலிருந்த விசுவாசத்தை மறுதலிப்பதைவிட இரத்தச்சாட்சியாக மரிக்க முன்வந்த ஆண்களும் பெண்களும் நூற்றாண்டுகள் நெடுகிலும் இருந்திருக்கிறார்கள். அவர்களது தியாகம் நமக்குத் தைரியமூட்டுகிறது. கிறிஸ்துவின் மீதான அவர்களது அர்ப்பணிப்பு, நம்முடைய அர்ப்பணிப்பை வளர்க்கிறது. வால்தேனியர்களுக்கும் ஹஸ்-ஜெரோம் போன்ற பிந்தைய சீர்திருத்தவாதிகளுக்கும் ஊக்கமளித்த வேதாகம நியதிகள் சிலவற்றை இந்த வாரம் ஆராய்வோம். பாலிகார்ப்பைக் கொலைசெய்த அதே வல்லமை, பிறகு போப்பியம்வாயிலாக வெளிப்பட்டுவந்த சமயத்திலும் மெய்க்கிறிஸ்தவர்கள் தங்கள் கர்த்தருக்கு உண்மையாக வாழத் தீர்மானித்தார்கள்.

***மாபெரும் போராட்டம்*, 4-6ம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, ஏப்ரல் 20 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.**

# துன்புறுத்தப்பட்டாலும் வெற்றியாளர்கள்

**தானி 7:23-25; வெளி 12:6,14 எந்தத் தீர்க்கதரிசனக் காலக்கட்டங்களைக் காட்டுகின்றன?**

தேவமக்கள் அவருக்கு உண்மையாக இருந்தால், சாத்தான் கடுங்கோபமடைகிறான். பிறகு உபத்திரவம் கொடுக்கிறான். மத்தியக் காலத் திருச்சபை தேவமக்களோடு 'யுத்தம்பண்ணி', அவர்களை 'ஒடுக்குகிற' ஒரு காலம் வரவிருந்ததுபற்றி தானியேல் தீர்க்கதரிசி விவரிக்கிறார். தானி 7:22,25. அந்தச் சமயத்தில், தேவனுடைய திருச்சபை வனாந்தரத்திற்குத் தப்பியோடும் என்றும், அங்கே 'ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்(படும்)' என்றும் யோவான் கூறினார். வெளி 12:14. மேலும், 'ஸ்திரீயானவள் (திருச்சபை) வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ... தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது'. வெளி 12:16. தேவ மக்கள் வனாந்தரத்தில் போஷிக்கப்பட்டார்கள். போப்பாதிக்கத்தின் அந்த நீண்ட, இருண்ட காலம் முழுவதிலும், மாபெரும் போராட்டம் மும்முரமாக நடைபெற்றபோது, தேவனுடைய வார்த்தை அவர்களைப் பெலப்படுத்தி, தாங்கியது.

தேவமக்களுக்கு 'தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம்' உண்டாயிருந்தது. வாழ்க்கையின் மிகப்பெரிய சவால்களின் மத்தியில், தம் உண்மை ஊழியர்களுக்கு தேவன் ஓர் இடத்தை ஆயத்தம்பண்ணுகிறார். அவர்களின் உபத்திரவச் சமயத்தில், அவரது அன்பும் அக்கறையும்தான் அவரது மக்களுக்கு அடைக்கலமாக இருந்தது. சங்கீதம் 46.

1260 நாள் என்பதும், காலமும் காலங்களும் அரைக்காலமும் என்பதும் ஒரே காலக்கட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. வெளி 12:6,14. (3½ காலங்கள் அல்லது 3½ வருடங்கள் x 360 நாட்கள் = 1,260 நாட்கள்). வேதாகமத் தீர்க்கதரிசனங்கள் பெரும்பாலும் அடையாளங்களாக எழுதப்பட்டுள்ளன. தானியேல் -வெளிப்படுத்தலில் உள்ள தீர்க்கதரிசனப் பகுதிகளில், ஒரு தீர்க்கதரிசன நாள் என்பது, ஒரு வருடக் காலக்கட்டமாகும். இந்த நாள்-வருட நியதிபற்றி எண் 14:34; எசே 4:6இல் காணலாம்.

இந்த நாள்-வருட நியதிக்கு இன்னும் பல வேதாகம ஆதாரங்கள் உள்ளன. காலக் கணிப்பாய்வாளரும் பழைய ஏற்பாட்டு அறிஞருமான வில்லியம் ஷியா என்பவர், இந்த நியதிக்கு பழைய ஏற்பாடு முழுவதிலுமிருந்து இருபத்து மூன்று ஆதாரங்களைக் காட்டுகிறார். வேதவியாக்கியானிகள் நூற்றாண்டுகள் நெடுகிலும் அந்நியதியைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

விசிகாத்துகள், வாண்டல்கள், ஆஸ்ட்ரகாத்துகள் ஆகியோர் ரோமச் சபை போதித்த போதனைக்கு மாறாக நம்பினவர்கள். கி.பி. 538 இல், ஆஸ்ட்ரகாத் எனும் கொடிய இனத்தவர்கள் முழுவதுமாக ரோமிலிருந்து வெளியேற்றப்பட்டபோதுதான் 1260-நாள் ஆரம்பமாகியது. இந்த ஆவிக்குரிய இருண்ட காலக்கட்டம் கி.பி. 1798 வரை தொடர்ந்தது; அப்போது, பிரெஞ்சுத் தளபதியான பெர்தியர் ரோமிலிருந்து, போப்புவை அகற்றினார். இடைப்பட்ட நீண்டகாலக்கட்டத்தில் தேவனுக்குக் கீழ்ப்படிந்ததற்காக எண்ணற்ற கிறிஸ்தவர்கள் இரத்தசாட்சியாகக் கொல்லப்பட்டார்கள். மரணத்திலும் அவர்கள் வெற்றிபெற்றார்கள். குற்றங்களிலிருந்தும் பாவத்தின் ஆளுகையிலிருந்தும் கிறிஸ்துவில் வெற்றிபெற்று, 'ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால்' மேற்கொண்டார்கள். சிலுவையில் சாத்தான்மீது கிறிஸ்து பெற்ற வெற்றி, அவர்கள் பெற்ற வெற்றியாகும். அவர்கள் மரித்தாலும், கிறிஸ்துவின் வருகைவரை இளைப்பாறுகிற அனுபவமாக அது இருந்தது.

---

**நிறைவேறியுள்ள வேதாகமத் தீர்க்கதரிசனம் எவ்வாறு உங்கள் விசுவாசத்தைப் பெலப்படுத்தியது?**

# வெளிச்சம் இருளைப் போக்குகிறது

**யூதா 3,4 கொடுக்கிற எச்சரிப்பு என்ன? பிற்கால கிறிஸ்தவச் சபைக்கு அது எவ்வாறு பொருந்தியது?**

யூதா புத்தகமானது 'பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசுகிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய' உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கு கி.பி. 65க்குமுன் எழுதப்பட்டது. யூதா 1:1. 'பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக போராடவேண்டும் ... ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்(டுகிற) சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்' என்று உண்மையுள்ள இந்த விசுவாசிகளிடம், யூதா வலியுறுத்தினார். இந்த எச்சரிப்பு மத்தியக் கால விசுவாசிகளுக்கு இன்னும் அதிகமாகப் பொருந்தியது; ஏனென்றால் அஞ்ஞான பழக்கங்கள் சபைக்குள் புகுந்திருந்தன; தேவ வார்த்தைக்குமேலாக மனித பாரம்பரியங்கள் உயர்த்தப்பட்டன. வால்தேனியர்கள் போன்றவர்கள், பல நூற்றாண்டுகளாக, வேதாகமசத்தியங்களுக்காக உறுதியாக நின்றார்கள். 'கிறிஸ்துமட்டுமே தங்களுடைய மத்தியஸ்தர், வேதாகமம்மட்டுமே அதிகாரத்தின் ஒரே ஆதாரம்' என்று நம்பினார்கள். 'ஒவ்வொரு காலத்திலும் தேவனுக்குச் சாட்சிகளாக வாழ்ந்தவர்கள் இருந்தார்கள்; தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள மத்தியஸ்தர் கிறிஸ்து ஒருவரே என்றும், வேதாகமம்தான் வாழ்க்கையின் சட்டம் என்றும் நம்பினவர்களாக, மெய்யான ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரித்தார்கள்'[1]

**மரணத்தின் மத்தியில் தமக்கு உண்மையாக இருப்பவர்களுக்கு வெளி 2:10இல் தேவன் கொடுக்கிற வாக்குறுதி என்ன?**

இந்த வார்த்தைகள் சிமிர்னா சபைக்கு எழுதப்பட்டன. அந்தப் பட்டணத்தின் முக்கியக் கடவுள்களில் ஒன்று டயோனிசியஸ்; கொண்டாட்டத்துக்கும் இனப்பெருக்கத்திற்கும் டயோனிசியஸ்தான் கடவுளென நம்பினார்கள். டயோனிசியஸின் ஆசாரியர்கள் மரித்தபோது, அவர்களது அடக்க ஊர்வலத்தில் தலைகளில் ஒரு கீரிடம் சூடினார்கள். மரணத்தின்போது தலையில் வைக்கப்படுகிற கிரீடத்தையும், தீமையின் வல்லமைகளை வெற்றிபெற்றோரின் தலைகளில் வைக்கப்படுகிற ஜீவகிரீடத்தையும் யோவான் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

கிறிஸ்துவின் நிமித்தம் சோதனைகளையும் கஷ்டங்களையும் உபத்திரவத்தையும் மரணத்தையும் சகித்தவர்களுக்கு ஜீவகிரீடம் வழங்கப்படுகிறது. கிறிஸ்துவுக்காக மரணத்தைச் சகிப்பதற்கு ஜீவகிரீடமே விசுவாசிகளுக்கு ஊக்கமளிக்கிறது. அதுவே உபத்திரவத்தின் மத்தியில் வால்தேனியர்களுக்கு ஊக்கமளித்தது. ஒருநாளில் தாங்கள் இயேசுவைப் பார்க்கப்போவதையும், என்றென்றும் அவரோடு வாழப்போவதையும் நம்பினார்கள். ஜீவகிரீடம் நம்மிடமும் பேசுகிறது; அதாவது, நாம் இப்போது சோதனைகளை எதிர்கொள்ளலாம்; ஆனால் நாம் இயேசுவையே நோக்கிப்பார்க்கவேண்டும்; ஏனெனில் நமக்காக ஜீவகிரீடம் வைக்கப்பட்டுள்ளது.

[1] Ellen G. White, The Great Controversy, p. 61.

**சவாலான சமயங்களில் உங்களை ஊக்குவிப்பது என்ன? அச்சுறுத்துவது என்ன? அந்நேரங்களில் நீங்கள் என்ன வாக்குறுதிகளைப் பற்றிக்கொள்ளலாம்?**

# நிற்பதற்கான தைரியம்

**அப் 5:28-32; எபே 6:10-12; வெளி 3:11 ஆகியவை வலியுறுத்துகிற அடிப்படை நியதி என்ன?**

வால்தேனியர்களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் இருந்த குணநலன்கள் தெரியுமா? தேவன் மீதுள்ள முழுப்பற்றும், வேதாகம அதிகாரத்திற்குக் கீழ்ப் படிதலும், போப்புவுடைய மேலாதிக்கத்தின்மீதல்லாமல் கிறிஸ்துவுடைய மேலா திக்கத்தின்மீதுள்ள அர்ப்பணிப்புமாகும். விசுவாசமும் தைரியமும் நிறைந்த புதிய ஏற்பாட்டு சம்பவங்கள் அவர்கள் மனதில் நிறைந்திருந்தன.

பேதுருவும் அப்போஸ்தலர்களும் சேர்ந்து, 'மனுஷருக்குக் கீழ்ப்படிகிற தைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது' என்று சொல்லமுடிந்தது. அப் 5:29. 'கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமை யிலும் பலப்படுங்கள்' எனும் பவுலின் அறிவுரையைப் பற்றிக்கொண்டார்கள். எபே 6:10. 'ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ள தைப் பற்றிக்கொண்டிரு' எனும் இயேசுவின் ஆலோசனையில் சிரத்தை காட்டி னார்கள். வெளி 3:11. ரோமத் திருச்சபையின் பாரம்பரியங்களுக்கு ஒப்புக்கொடா மல், இந்த விசுவாச வீரர்கள் வேத சத்தியங்களுக்கு உறுதியாக நின்றார்கள்.

வேதாகமத்தை தங்கள் சொந்த மொழியில் முதன்முதலாகப் பெற்றவர் களில் வால்தேனியர்களும் உண்டு. வால்தேனியரான ஜீன் லெஜர், கையெழுத் தாக வேதாகமத்தைக் பிரதியெடுத்தார்; அதில் அவர்களது பணிபற்றிய முதற் கண் தகவல்களும் வரைபடங்களும் இடம் பெற்றிருக்கின்றன. வால்தேனி யர்கள் இத்தாலியிலும் தென் பிரான்சிலும் தாங்கள் வாழ்ந்த மலைப்பகுதிகளி லிருந்து வேதாகமத்தை இரகசியமாகப் பிரதியெடுத்தார்கள். பெற்றோர்கள் சிறு வயதிலேயே பிள்ளைகளுக்கு வேதாகமத்தின் பெரும்பகுதியை மனப்பாடமாகச் சொல்லிக் கொடுத்தார்கள். வேதாகமக் கைப்பிரதிக் குழு வேதாகமத்தைப் பிரதி யெடுப்பதில் மும்முரமாகச் செயல்பட்டது. இந்த இளம் வால்தேனியர்களில் பலர் ஐரோப்பா முழுவதிலும் வணிகர்கள்போல பயணம்செய்து, வேதாகமச் சத்தியங்களை இரகசியமாகப் பகிர்ந்தார்கள். சிலர் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து, வாய்ப்பு கிடைத்தபோது, சகமாணவர்களிடம் வேதாகமச் சத்தியங் களைச் சொன்னார்கள். பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி, சத் தியத்தைக் கேட்டவர்களிடம் மெய்யான ஆர்வம் வெளிப்பட்டபோது, வேதா கமத்தின் குறிப்பிட்ட பகுதிககளைக் கொடுத்தார்கள். பலர் உண்மையும் அர்ப் பணிப்புமிக்க உழைப்புக்கேற்ற பலனைப் பெற்றார்கள். வால்தேனியர்கள் வேதாகமத்தின் அனைத்து போதனைகளையும் தெளிவாக விளங்கியிராத நிலை யிலும், தேவ வார்த்தையை மற்றவர்களோடு பகிர்ந்து, பல நூற்றாண்டுகளாக சத்தியத்தைப் பாதுகாத்தார்கள்.

'நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகா சிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்'. நீதி 4:18. தேவன் தம் பிள்ளைகளை வழிநடத்துகிற பாதையை உயரே உயரே எழும்புகிற சூரியனுக்கு ஒப்பிடுகிறார். சூரியனை தேவன் சட்டென முழுப்பிரகாசத்தோடு ஜொலிக்கச் செய்தால், அது நம்மைக் குருடாக்கிவிடும். இருள் பல நூற்றாண்டுகளாக உலகத்தை மூடியிருந்த நிலையில், தம் வார்த்தைக்கு தங்களை அர்ப்பணித்து, அதைத் தொடர்ந்து தேடி வந்தவர்களை தேவன் எழும்பச் செய்தார்.

---

**நாம் கிறிஸ்துவின் ஒளியைப் பிரதிபலித்து, எவ்வாறு நம் சமுதாயத்தில் பிரகாசிக்கலாம்? அவ்வாறு பிரகாசிக்கிறோமா?**

# சீர்திருத்தத்தின் விடிவெள்ளி

**தாவீது-எரேமியாவிடம் காணப்பட்ட எந்த மனநிலைகள், உண்மையில் சீர்திருத்தத்திற்கு மூலைக்கல்லாக இருந்தன? சங் 19:7-11; சங் 119:140; சங் 119:162; எரே 15:16.**

சீர்திருத்தவாதிகள் ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தையில் ‘சந்தோஷப்பட்டார்கள்’. தேவ சித்தத்தைச் செய்வதில் ‘மகிழ்ச்சியடைந்தார்கள்’. தேவ வார்த்தையை ஆராய்வது மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டுவருகிறது; இது மிக முக்கிய அடிப்படை உண்மைகளில் ஒன்று. வேத ஆராய்ச்சி கடினமான பணி அல்ல. அது கிரியைத்துவப் பயிற்சியும் அல்ல. அது கட்டாய நிபந்தனையும் அல்ல; மாறாக மகிழ்ச்சியான அனுபவம். அவர்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்தபோது, பரிசுத்த ஆவியின் வல்லமையால் மாற்றம் அடைந்தார்கள்.

‘பரிசுத்த வேத வாக்கியங்களின் போதனைக்கும் மனமாற்றுகிற வல்லமைக்கும் விக்ளிஃபின் குணம் ஒரு சாட்சியாக இருக்கிறது. வேதாகமமே அவரை அப்படியொரு நபராக மாற்றியது. வெளிப்பாட்டின் மாபெரும் சத்தியங்களைப் பற்றிப்பிடிக்க எடுக்கப்படும் முயற்சி, எல்லா மனத்திறன்களுக்கும் புத்துணர்வும் வலிமையும் கொடுக்கிறது. அது மனதை விசாலமாக்கி, புலன்களைக் கூர்மையாக்கி, பகுத்தறிவைப் பக்குவப்படுத்துகிறது. வேறெந்த ஆராய்ச்சியாலும் முடியாத அளவுக்கு வேதாகம ஆராய்ச்சி, நம் சிந்தனையையும் உணர்வையும் விருப்பத்தையும் மேம்படுத்துகிறது. நோக்கத்தையும் பொறுமையையும் தைரியத்தையும் மனோபலத்தையும் ஸ்திரப்படுத்துகிறது; குணத்தைச் செம்மையாக்கி, ஆத்துமாவைப் பரிசுத்தமாக்குகிறது. வேதவாக்கியங்களை ஆர்வத்தோடும் பயபக்தியோடும் ஆராய்கிறவரின் சிந்தை நித்தியமானவரின் சிந்தையோடு நேரடியாகத் தொடர்புகொள்கிறது; செயல்படுகிற, வலிய அறிவுத்திறனுள்ள மனிதர்களை உருவாக்குகிறது; உன்னதமான நியதிகளைப் பெற்ற மனிதர்களை உலகிற்குக் கொடுக்கிறது; மனித தத்துவங்களின் சிறந்த பயிற்சியால்கூட அப்படிப்பட்ட மனிதர்களை ஒருபோதும் கொடுக்கமுடியாது.’

**தேவ வார்த்தையைப் பகிர்வது பற்றி தீமோத்தேயுவுக்கு பவுல் கொடுக்கிற அறிவுரை என்ன? 2தீமோத்தேயு 2:1-3.**

தேவ வார்த்தையின் சத்தியமும் கிறிஸ்துதருகிற இரட்சிப்பின் மகிழ்ச்சியும் இருதயங்களை நிரப்பியிருந்ததால், சீர்திருத்தவாதிகள் அதைப் பகிர்ந்தார்கள். விக்ளிஃப் தன் வாழ்நாள் முழுவதையும் தேவ வார்த்தையை மொழிபெயர்ப்பதிலேயே கழித்தார்; அதற்கு இரண்டே காரணங்கள்தாம் உண்டு: ஜீவனுள்ள கிறிஸ்து தம் வார்த்தைமூலம் அவரை மாற்றினார்; அவர் கற்றுக்கொண்டவற்றை கிறிஸ்துவின் அன்பானது மற்றவர்களோடு பகிர்வதற்கு அவரை ஊக்குவித்தது.

விக்ளிஃபின் காலத்திற்குமுன், வேதாகமத்தின் சில பகுதிகளே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தன. அவரை ரோம அரசு கைதுசெய்வதற்கு முன்னரே அவர் மரித்ததால், போப்பரசு அவரது எலும்புக்கூட்டைத் தோண்டி எடுத்து, எரித்து, அவரது சாம்பலை ஆற்றில் எறிந்தார்கள். தண்ணீரில் பல இடங்களுக்குச் சென்ற அந்தச் சாம்பல் போலவே, அவரது பணியின் நிமித்தம் தேவ வார்த்தை பல்வேறு இடங்களுக்குப் பரவிச் சென்றது. இவ்வாறு தேவன் ‘சீர்திருத்தத்தின் விடிவெள்ளியாகிய’ விக்ளிஃபைப் பயன்படுத்தினார்.

# எதிர்பார்ப்பால் உற்சாகம்

**மத்திய காலத்தில் வாழ்ந்த விசுவாசிகள் எவ்வாறு மாபெரும் போராட்டத்தின் நிஜத்தை அனுபித்தார்கள்? எபி 2:14,15.**

கொடிய உபத்திரவங்கள்மத்தியில் உண்மையுள்ள வால்தேனியர்களை உற்சாகமாக வைத்திருந்தது என்ன? ஹஸ், ஜெரோம், டிண்டேல், லடிமர், மத்தியக் கால இரத்தசாட்சிகள் போன்றோர் அக்கினியையும் பட்டயத்தையும் எதிர்கொள்ள அவர்களுக்கு தைரியம் தந்தது எது? தேவ வாக்குறுதிகளில் இருந்த விசுவாசம்தான். 'நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்' எனும் கிறிஸ்துவின் வாக்குறுதியை நம்பினார்கள். யோவான் 14:19. வாழ்க்கையின் மிகப்பெரிய போராட்டங்களில் அவரது பெலன் போதுமானதெனக் கண்டுகொண்டார்கள். கிறிஸ்துவோடு அவருடைய பாடுகளில் பங்கேற்பதில் மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்களது உண்மைதன்மை உலகத்திற்கு சாட்சியாக இருந்தது.

நடந்ததை அல்ல, இனி நடக்கப்போவதை நோக்கிப் பார்த்தார்கள். கிறிஸ்து உயிர்த்தெழுந்ததால், மரணம் தோற்கடிக்கப்பட்ட சத்துருவானதை அறிந்தார்கள். மரணம் தன் பிடியை இழந்ததை தைரியமிக்க அவர்கள் கண்டார்கள். தேவ வார்த்தையின் வாக்குறுதிகளைப் பற்றிப்பிடித்து, வெற்றிப்பெற்றார்கள்.

**யோவான் 5:24; 11:25, 26; 1யோவான் 5:11-13 ஆகிய வசனங்கள் தனிப்பட்ட விதத்தில் உங்களுக்குக் கொடுக்கிற நிச்சயம் என்ன? வாழ்க்கையில் சோதனைகளின்போது அவை எவ்வாறு உதவுகின்றன?**

சிறையிருப்பு, அநீதி, மரணம் ஆகியவற்றின் மத்தியில் ஜான் ஹஸ் தடுமாறவில்லை. பல மாதங்கள் சிறையில் பாடனுபவித்தார். குளிராலும், ஈரமான சீதோஷணத்தாலும் காய்ச்சல் வந்து, கிட்டத்தட்ட மரிக்கிற நிலைக்குச் சென்றார். ஆனாலும், 'தேவ கிருபை அவரைத் தாங்கியது; இறுதித் தீர்ப்பிற்குமுன் இருந்த, துன்ப வாரங்களில், பரலோகச் சமாதானம் அவருடைய ஆத்துமாவை நிரப்பியது. ''நாளைக்கு மரணதண்டனையை எதிர்பார்க்கிறவனாக, சிறையில் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ள எனது கரத்தால் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இயேசுகிறிஸ்துவின் உதவியுடன், இனிவரும் வாழ்வின் மேலான சமாதானத்தில் அனைவரும் சந்திக்கும்போது, தேவன் என்மீது எப்படி இரக்கம் காட்டியிருக்கிறார் என்பதையும், எனது சோதனைகளுக்கும் விசாரணைகளுக்கும் மத்தியிலும் அவர் எவ்வளவு வல்லமையுடன் என்னைத் தாங்கியிருக்கிறார் என்பதையும் அறிந்துகொள்ளுவீர்கள்'' என்று நண்பர் ஒருவருக்கு எழுதியிருந்தார். மெய் விசுவாசம் வெற்றிபெறும் என்று நிலவறையின் இருளிலும் முன்னறிவித்தார்.'

அப்போஸ்தலனாகிய பவுல் கொடுக்கிற அறிவுரை இன்று நமக்கும் பொருந்தும். 'நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே'. எபி 10:23. முற்காலங்களில் தேவ வாக்குறுதிகள் அவரது மக்களைத் தாங்கியதுபோல, இன்று நம்மையும் தாங்குகின்றன.

---

**கிறிஸ்துவுக்காக அனைத்தையும் இழப்பது என்றால் என்ன? இறுதியில் உண்மையில் எதை இழக்கிறோம்? மாற்கு 8:36. பூமியின் இறுதிப் போராட்டத்தில் நம்மைத் தாங்கும்படிக்கு வால்தேனியர்கள் மற்றும் சீர்திருத்தவாதிகளிடமிருந்து என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?**

# மேலும் படிக்க:

'தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மனிதர்களுக்கு மகத்தான வெளிச்சத்தை தேவன் கொடுத்தார்; ரோமின் அநேக தவறுகளை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்; ஆனால் உலகத்திற்குக்கொடுக்கப்படவிருந்தவெளிச்சம்அனைத்தையும்அவர்கள்பெற்றுக்கொள்ள வில்லை. தேவன் தம்முடைய இந்த ஊழியக்காரர்கள்மூலமாக, ரோமானியத்தின் இருளி லிருந்து மக்களை வெளியேற்றிக் கொண்டிருந்தார்; ஆனால் பெரும் தடைகளை அவர்கள் சந்திக்கவேண்டியிருந்தது; அவர்களால் தாங்கமுடிந்த அளவுக்குப் படிப்படியாக தேவன் அவர்களை நடத்தினார். வெளிச்சமனைத்தையும்ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்ள அவர்கள் ஆயத்தமாக இல்லை. வெகுகாலம் இருளில் வசித்தவர்களால் நடுப்பகலின் சூரிய வெளிச் சத்தைத் தாங்க முடியாததுபோல, இவர்களுக்கும் எல்லாம் வெளிப்பட்டிருந்தால் அது அவர்களைப்பின்வாங்கச் செய்திருக்கும். எனவே மக்கள் அதைப் பெற்றுக்கொள்ளும் வண் ணம், தேவன் அந்தத் தலைவர்களுக்குக் கொஞ்சம்கொஞ்சமாக வெளிப்படுத்தினார். அடுத் தடுத்த நூற்றாண்டுகளில் வரவிருந்த உண்மையான ஊழியக்காரர்கள் அந்தந்தக்கால மக் களை சீர்திருத்தத்தின் பாதையில் இன்னும் அதிகமாக நடத்திச்செல்ல இருந்தார்கள்.'

'சுவிசேஷத்திற்குச் சீஷராக மாறிய ஒரு குருவானவருக்கு அவர் எழுதின வேறொரு கடிதத்தில், "விலையுயர்ந்த ஆடைகளை அணிவதில் மகிழ்ச்சியடைந்ததாகவும் அற்பமான அலுவல்களில் தனது காலத்தை வீணடித்ததாகவும்" தன்னையே குற்றஞ்சாட்டி யிருந்தார் ஹஸ். அதன்பிறகு, மனதைத் தொடக்கூடிய இந்த எச்சரிப்புகளும் அதில் இடம்பெற்றிருந்தன: 'மானியங்களும் சொத்துகளும் அல்ல, தேவமகிமையும் ஆத்துமாக்களின் இரட்சிப்புமே உங்கள் மனதில் நிரம்பியிருக்கட்டும். உங்கள் ஆத்துமாவை அலங்கரிக்காமல், உங்கள் வீட்டை அலங்கரித்தல் தவறு. இதுகுறித்து எச்சரிக்கையாயிருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் ஆவிக்குரிய மாளிகைமேல் அதிக அக்கறைகாட்டுங்கள். ஏழைகளிடம் அன்போடும் தாழ்மையோடும் நடந்துகொள்ளுங்கள், உங்கள் பொருட்களை விருந்தில் வீணாக்காதீர்கள். உங்கள் வாழ்க்கையைத் திருத்தி, மிதமிஞ்சிய செயல்களைத் தவிர்க்கா விட்டால், என்னைப்போலக் கடும்சிட்சைக்கு ஆளாவீர்களெனப் பயப்படுகிறேன்.'

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *'படிப்படியான வெளிச்சம்' என்றால் என்ன அர்த்தம்? தேவன் படிப்படியாக சத்தியத் தை வெளிப்படுத்துவது ஏன்? இந்த நியதிகள் எவ்வாறு இன்று தேவனுடைய திருச் சபைக்குப் பொருந்துகிறது?*

2. *சத்தியம் குறித்த புதிய கண்டுபிடிப்புகள் எவ்வாறு தேவமக்கள் ஏற்கனவே புரிந் திருந்த சத்தியங்களோடு தொடர்புடையவையாக இருக்கின்றன? புதிய வெளிச்சம் ஏன் பழைய வெளிச்சத்திற்கு முரணாக இருக்கக்கூடாது?*

3. *நீங்கள் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும், வேதாகமப் போதனைக்கு முரணான விழு மியங்களையும் கருத்துகளையும் ஒழுக்கச்சட்டங்களையும் உங்கள் கலாச்சாரம் நிச் சயமாக முன்னிறுத்த வாய்ப்புள்ளது. இந்த முரணான விஷயங்களை எதிர்கொள்ளும் போது, சபையாகவும் தனிநபராகவும் எவ்வாறு இந்தச் சவால்களை எதிர்கொள்ளப் போகிறீர்கள்? நல்ல குடிமக்களாக வாழ்கிற அதே நேரத்தில் எவ்வாறு நம் கலாச்சா ரம் முன்வைக்கிற தவறான விழுமியங்களுக்கு அடிபணியாமல் இருக்கலாம்?*

4. *ஜான் ஹஸ்ஸின் கடிதம் எவ்வாறு இன்று உங்கள் சிந்தனையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது? அந்தக் கடிதத்தில் அதிகம் உங்களிடம் பேசுகிற பகுதி என்ன?*

# இரு அண்டைவீட்டாரின் கதை

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

மூசாவின் மதநம்பிக்கைபடி விற்பனைக்காக பன்றி வளர்ப்பது தவறு. ஆனால் மூசா பன்றி பண்ணையில் வேலைசெய்தார்.

நிகோலோனாகாவின் மதநம்பிக்கையின்படி பாலியல் ஒழுக்க்க் கேடு தவிர, வேறு எந்தக் காரணத்திற்காகவும் விவாகரத்து செய்யக் கூடாது. ஆனால் நிகோலோனாகா மூன்று முறை திருமணம் செய்தார்; அதுமட்டுமல்ல, விதிமுறைப்படி திருமணம் செய்யாமல் அவர்களை மனைவியாக்கினார்.

இருவரும் அருகில் வசித்துவந்தார்கள்; ஆனால் தங்கள் மதநம்பிக்கைகளின்படி அவர்கள் வாழவில்லை. ஆனால் மொசம்பிக்கில் தேவன் அவர்களுக்கு ஒரு திட்டம் வைத்திருந்தார்.

ஒருநாள், மூசாவின் பன்றிகளில் ஒன்று நிகோலோனாகாவின் தோட்டத்திற்குள் நுழைந்து, சேதப்படுத்திவிட்டது.

மிகுந்த கோபமடைந்த நிகோலோனாகா கைகலப்பில் இறங்கினார். அந்தச் சண்டையில் வெற்றிபெற்றார். மூசா இரத்தக் காயத்துடன் நொண்டி, நொண்டி சென்றார். ஆனால் மூசா விடுவதாக இல்லை. செய்வினை வைத்துப் பழிவாங்கப் போவதாக சபதமிட்டார். “முப்பது நாட்களில் செத்துப்போவாய்” என்று நிகோலோனாகாவிடம் சொன்னார்.

மறுநாள் காலையில் நிகோலோனாகாவுக்கு மிகவும் உடல் சரியில்லாமல் போனது. முன்பு அவர் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபைக்குச் சென்றிருக்கிறார்; எனவே அங்கிருந்த தன் நண்பர்களிடம் அதைப்பற்றிச் சொன்னார்.

நிகோலோனாகாவின் உடல்நிலை மிகவும் மோசமானதால், கவலையடைந்தார். 15 நாட்களுக்கு பிறகு தனக்காக ஜெபிக்கும்படி சபை அங்கத்தினர்களிடம் கேட்டார்; அவருடைய வீட்டில் ஜெபக்கூட்டத்திற்கு போதகர் ஏற்பாடு செய்தார்.

ஆனாலும் நிகோலோனாகாவுக்கு சுகமாகவில்லை. மேலும் ஒரு வாரமானது; என்ன செய்வதென்று தெரியவில்லை.

மூசா 30 நாட்கள் கெடு விதித்திருந்த நிலையில், நிகோலோனாகாவுக்காக இரவு முழுவதும் உபாவசமிருந்து ஜெபிப்பதற்கு போதகர் அழைத்திருந்தார்.

மறுநாள் அதிகாலையிலேயே போதகரின் வீட்டை மூசா தட்டினார். நிகோலோனாகாவின் தேவனோடு தன்னுடைய தேவர்கள் சண்டையிட்டதையும், ஆனால் நிகோலோனாகாவின் தேவன் வெற்றிபெற்றதையும் பற்றி அருமையான ஒரு கதையை போதகரிடம் சொன்னார். இனி தன்னால் நிகோலோனாகாவின் உயிரை எடுக்கமுடியாது என்றார். தான் ஒரு கிறிஸ்தவனாக மாற விரும்புவதாகவும் கூறினார்.

“நான் நிகோலோனாகாவின் தேவனை ஆராதிக்க விரும்புகிறேன்” என்றார்.

நிகோலோனாகா குணமடைந்தார். அவரும் மூசாவும் அட்வென்டிஸ்ட் சபையில் சேர்ந்தார்கள். இருவரும் இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றார்கள். இன்று இருவருமே, மொசம்பிக்கில் தாங்கள் வாழ்கிற பகுதியில் நன்மையான செல்வாக்கை ஏற்படுத்தி வருகிறார்கள்.